* 24.01.2019 அன்று 25.01.2019 அன்று திண்டுக்கல், GTN கலைக்கல்லூரியில் "சமூக எந்திரி" மாத இதழ் சார்பாக நடைபெற்ற பேச்சுப்போட்டியில் K.பெருமாள்ராஜா (III B.Sc. Che) கலந்துகொண்டார்.
* 22.02.2019 அன்று சிவகாசி, ஸ்ரீ காளீஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மாநில் அளவிலான கல்லூரிகளுக்கிடையிலான வினாடிவினா போட்டியில் விவேகா நுண்கலை மன்ற மாணவர்கள் இருவர் கலந்துகொண்டனர்.

* 25.06.2019 முதல் 27.06.2019 வரையிலான மூன்று நாட்கள் சிவகாசி, அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் அக்கல்லூரியின் தமிழ்த்துறை மற்றும் தென்காசி நாட்டுப்புறக் கலைகள் அறக்கட்டளை இணைத்து நடத்திய நாட்டுப்புறக் கலைகள் குறித்த பயிற்சிப் பட்டறையில் விவேகா நுண்கலை மன்ற மாணவர்கள் 14 பேர் ஆய்வக உதவியாளர் திரு.V.வீரணன் மேற்பார்வையில் சென்று கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

* 08.09.2019 அன்று மதுரை, தெய்வ நெறிக்கழகத்தில் நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கிடையேயான ஸ்ரீமத் பகவத்கீதை ஒப்புவித்தல் போட்டியில் விவேகா நுண்கலை மன்றம் சார்பாக K.விஷ்வா (II Zoo.) கலந்து கொண்டு இரண்டாம் பரிசு பெற்றார்.

* 13.09.2019 அன்று மதுரை, காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவு தின சிறப்பு நிகழ்ச்சிகளில் நமது கல்லூரியின் விவேகா நுண்கலை மன்ற மாணவர்கள் வரலாற்றுத்துறை உதவிப்பேராசிரியர் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட செயல் அலுவலர் திரு.M.P.குமரேசன் உடன் சென்று கலந்து கொண்டு பரிசுகள் பெற்றனர்.

* 26.09.2019 அன்று மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் காந்திய மாத இதழ் சார்பாக நடைபெற்ற காந்திஜியின் 150வது பிறந்தநாள் விழா சிறப்பு கல்லூரிகளுக்கிடையிலான கவிதை, பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் நமது கல்லூயின் விவேகா நுண்கலை மன்ற மாணவர்கள் கலந்து கொண்டு பரிசு பெற்றனர்.

* 23.10.2019 அன்று மாலை 6.30 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் விவேகா நுண்கலை மன்றம் சார்பாக "கலைக்கூடல்-6" மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சிகளைக் கல்லூரி துணை முதல்வர் திரு.V.பார்த்தசாரதி தலைமை தாங்கி துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான மாதாந்திர விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.

* 01.10.2019 அன்று கல்லூரியின் கலையரங்கில் விவேகா நுண்கலை மன்றம் சார்பாக மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தின ஆண்டு சிறப்பு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் காந்திஜியின் பெருமையினைப் போற்றும் விதமாக பல்வேறு நிகழ்ச்சிகளை மாணவர்களை நிகழ்த்திக் காட்டினர்.